



சென்னை, காமராசர் சாலையில் நேற்று முன்தினம் (26.1.2024) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் தஞ்சாவூர் – தென்னக பண்பாட்டு மையம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளையும் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினையும் பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சென்னை - காமராசர் சாலையில் - அரசின் சார்பில் 75வது குடியரசு தினவிழா! ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியக் கொடியேற்றினார்!

# ‘அண்ணா பதக்கம்’ - விருதுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## முப்படைகள், காவல்துறை மரியாதை - கண் கவரும் கலை நிகழ்ச்சிகள் - அரசுத் துறைகளின் அலங்கார வாகன அணிவகுப்புகள்!

**சென்னை, ஜன. 28-**

**தமிழ்நாடு அரசின் சார்பில் இந்தியத் திருநாட்டின் 75வது குடியரசு தினவிழா, நேற்று முன்தினம் (26.1.2024) காலை, சென்னை - மெரினா - காமராசர் சாலையில் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள் ஆகியவற்றை விருதாளர்களுக்கு வழங்கி கௌரவித்தார்.**

**இதனைத் தொடர்ந்து - தமிழ்நாடு அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரி மாணவிகளின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள், பல்வேறு அரசுத் துறைகளின் திட்டங்கள், சாதனைகளை விளக்கும் அலங்கார வாகனங்களின் அணிவகுப்பு ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.**

**அரசின் சார்பில், சென்னை - காமராசர் சாலையில் மிகச் சிறப்புற நடைபெற்ற குடியரசு நாள் விழா நிகழ்ச்சிகள் பற்றிய விபரம் வருமாறு:-**

தமிழ்நாடு அரசின் சார்பில் - இந்தியத் திருநாட்டின் 75வது குடியரசு தினவிழா, சென்னை - மெரினா - காமராசர் சாலையில் (உழைப்பாளர் சிலை அருகில்) நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

குடியரசு நாள் விழாவுக்கு சரியாக காலை 8.00 மணிக்கு வருகை தந்த ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பூக்கூடை வழங்கி வரவேற்று, தேசியக் கொடிக் கம்ப மேடை அருகே அழைத்துச் சென்றார்.

ஆளுநர் தேசியக் கொடியேற்ற, நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.

**அண்ணா பதக்கங்கள்!**

இதனைத் தொடர்ந்து, ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் - முப்படையினர், காவல் துறையினர், தேசிய மாணவர் படை, பல்வேறு காவல் பிரிவினர், வனம் மற்றும் தீயணைப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

குடியரசு நாளையொட்டி வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் உள்ளிட்ட பல்வேறு பதக்கங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி கவுரவித்தார்கள்.

முதல்வர் அவர்கள் – வீர தீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள் தூத்துக்குடியைச் சேர்ந்த யாசர் அராபத், நெல்லையைச் சேர்ந்த டேனியல் செல்வசிங், தூத்துக்குடியைச் சேர்ந்த சிவகுமார் ஆகியோருக்கு வழங்கினார். தொடர்ந்து, ‘கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கத்தை’ கிருஷ்ணகிரியைச் சேர்ந்த முகமது ஜுபேருக்கும், ‘சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான’ விருதினை சேலத்தைச் சேர்ந்த பாலமுருகனுக்கும் வழங்கினார்.

**மதுரை ஆயி அம்மாளுக்கு – முதலமைச்சர் சிறப்பு விருது!**

அதனையடுத்து - அரசுப்பள்ளிக்கு தமது நிலத்தை தானமாக வழங்கிய மதுரையைச் சேர்ந்த ஆயி அம்மாளுக்கு, ‘முதலமைச்சர் சிறப்பு விருது’ வழங்கி, முதல்வர் அவர்கள் கவுரவித்தார்கள்.

பின்னர் முதல்வர் அவர்கள் – ‘காந்தியடிகள் காவலர் பதக்கங்களை’, விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சசாங் சாய், மத்திய நுண்ணறிவுப் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் காசிவிஸ்வநாதன், மதுவிலக்குப் பிரிவு காவல் ஆய்வாளர் கே.எம்.முனிய சாமி, மத்திய நுண்ணறிவுப் பிரிவு காவல் உதவி ஆய்வாளர் பாண்டியன், மத்திய நுண்ணறிவு பிரிவு தலைமை காவலர் ரங்கநாதன் ஆகியோருக்கு வழங்கினார்கள்.

**சிறந்த காவல் நிலையங்களுக்கான விருதுகள்!**

பின்னர் சிறந்த காவல் நிலையங்களுக்கான ‘முதலமைச்சர் விருதுகளை’ முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

விருது பெற்றவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்வுகளையடுத்து விழாவில் - நமது தமிழ்ப் பண்பாடு, பாரம்பரியத்தைப் பறைசாற்றும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்நாடு அரசுப்பள்ளி, தனியார் பள்ளி மாணவிகளின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளை ஆளுநர் ஆர்.என்.ரவி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பார்வையிட்டார்கள்.

இதனைத்தொடர்ந்து, ஒடிசா கலைக் குழுவினர் சார்பில் பாரம்பரிய நடன நிகழ்ச்சியும், மணிப்பூர் மக்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சியும், அசாம் மாநிலத்தின் பாரம்பரிய நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது. அதனையடுத்து, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அதில் - தமிழ்நாட்டின் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் விதமாக, மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றன.

**அரசுத் துறைகளின் அலங்கார வாகன அணிவகுப்பு!**

குடியரசு தினவிழாவை யொட்டி பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது. இதில், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கின் மாதிரி, தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் ஊர்திகள், விளையாட்டுத் துறையில் தமிழ்நாட்டின் சாதனைகளை விளக்கும் ஊர்திகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் ஊர்திகள் அணிவகுத்துச் சென்றன.

---

### எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. சிறுபான்மை சமூக நீதிபதிகள் இடம் பெற வேண்டும்!

# சமூகநீதியைக் காப்பாற்ற தலைமை நீதிபதி முன்வர வேண்டுகோள்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, ஜன. 28-*

*தமிழ்நாடு தேர்வாணையத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் நீதிபதிகள் நியமனத்திற்கான நேர்காணலில் சென்னை உயர்நீதிமன்ற நான்கு நீதிபதிகள் தேர்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் இருவர் பார்ப்பனர் என்பது சமூகநீதிக்கு எதிரானதாகும். மாண்பமை தலைமை நீதிபதி அவர்கள் ஓர்ந்து கண்ணோடாது சமூகநீதி அடிப்படையில் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த நீதிபதி களும் ரொட்டேஷன் முறையில் இடம் பெறச் செய்ய தலைமை நீதிபதி முன்வர வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் இதுவரை நீண்ட காலம் காலியாக உள்ள நீதித்துறை நியமனங்கள் 245 பதவிகளுக்கான தேர்வு வருகின்ற 29.1.2024, திங்கள் முதல் தொடர்ந்து 10 அல்லது 12 நாள்கள் சென்னையில் நடைபெறவிருக்கிறது.*

*இத்தேர்வுகள் முதலில் எழுத்து பூர்வ தேர்வு (அதற்குரிய மதிப்பெண் தனி), அடுத்து அந்த எழுத்துத் தேர்வில் போதிய அல்லது அதிக மதிப்பெண் பெற்றவர்களில் நேர்காணலுக்குத் தகுதியுள்ளவர்களை அழைத்து, நேரில் கேள்விகள் கேட்டு அதற்கென தனி மதிப்பெண்களை வழங்கி தேர்வு செய்யப்படுவார்கள்.*

**நீதிபதிகள் நியமன நேர்காணல்**

*அத்தகையவர்களின் தேர்வு, பெரிதும் நேர்காணல் மூலம் பெறும் தேர்வு மதிப்பெண்கள் மூலமே இறுதி முடிவு மொத்த கூட்டலின் மூலம் வெளியாகும்.*



*written test Marks + Interview Marks என்பது கூட்டுத் தொகை மூலம் தான் இறுதிப் பட்டியலை தமிழ்நாடு தேர்வாணையம் அறிவிக்கும். நீதித்துறை சம்பந்தப்பட்ட இந்தப் பதவிகள் 245 ஆகும்.*

*இதில் தேர்வுக்கான நேரிடைக் கேள்வி பதில்கள் மூலம் போட்டியிடும் நபர்களின் தேர்வை, நேர்காணலின் முடிவுகளை வழக்கமான தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்களோடு நான்கு உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேசைக்கு ஒருவராக இந்த 10 அல்லது 12 நாள்களில் அமர்ந்து கேள்வி கேட்டு மதிப்பெண் வழங்கி தேர்வை இறுதியாக்குவர்.*

*வருகின்ற 29.1.2024 அன்று துவங்கவிருக்கும் அத்தேர்வு நீதிபதி பதவிகளுக்குரியதை நேர்காணல் நடத்தி, மதிப்பெண் தருவதற்கு சென்னை உயர்நீதிமன்றம் சார்பில் நான்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள், தலைமை நீதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று வரும் செய்தியில், நான்கில் இரண்டு பேர் பார்ப்பன வகுப்பைச் சேர்ந்த நீதிபதிகள் ஆவர்.*

*அதில் ஒருவர் மிகவும் பிரச்சினைக்குரிய தனது விருப்பு வெறுப்புகளை வெளிப்படையாகவே தமது தீர்ப்புகளில் பகிரங்கப்படுத்தி எழுதி பொதுமக்கள், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் போன்ற வர்களின் விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் (பொது மேடைகளில்) ஆளானவர்!*

*உயர்நீதிமன்ற நீதிபதிகள் நான்கு பேர்களில் ஒருவர்கூட தாழ்த்தப்பட்ட, பழங்குடியின (S.C., S.T.,) சமூகத்தைச் சார்ந்தவர்களோ, சிறுபான்மை (Minority community) சமூகத்தவர்களான முஸ்லீம், கிறிஸ்தவர்கள் அல்லது மற்ற சமூகத்தைச் சார்ந்தவர்களாகவோ இல்லாதது மிகப் பெரிய ஏமாற்றத்திற்கு உரியது. அவர்களுக்கு சமூகநீதிப்படி நியாயம் கிடைத்து போதிய எண்ணிக்கையில் பதவிகள் பெறுவார்களா?*

*இந்நிலையில் விகிதாசார கணக்கு விகிதப்படி சார்பு நிலை இல்லாமல் நேர்காணல் மூலம் தேர்வுகள் நடைபெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுமோ என்ற சந்தேகம் பெரிதாக பலரிடமும் ஏற்பட வாய்ப்பு உண்டாகும் நிலை உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை!*

**சொந்த விருப்பு – வெறுப்பில் அல்ல!**

*தனிப்பட்ட முறையில் நமக்கு எந்த உள்நோக்கமோ, குறிப்பிட்டவர்கள் தேர்வாக வேண்டும் என்ற சொந்த விருப்பு, வெறுப்பு ஒட்டியோ இல்லாமல் பொது நோக்கத்தோடு இதனை நமது பெருமைக்குரிய தலைமை நீதிபதி அவர்களின் மேலான பார்வைக்கு உரிய திருத்த நடவடிக்கை அவசரத் தேவை என்ற அடிப்படையில் சமர்ப்பிக்கின்றோம்.*

*தற்போதுள்ள தலைமை நீதிபதி அவர்கள் வந்து பொறுப்பேற்றுள்ள நிலையில், சமூகநீதி மண் இது என்பதை நன்கு உணர்ந்தவர். இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி சமூகநீதி வழங்குதல் என்பது அதன் மாற்றப்படவே முடியாத அடிக்கட்டுமானம் (Basic Structure of our Constitution) என்பதை நன்கு அறிந்தவர். நியாயம் வழங்குவதில் “அனைவருக்கும் அனைத்தும்“ கிடைக்கும் வண்ணம் ஓர்ந்து கண்ணோடாது நடந்து கடமையாற்றும் கண்ணியமிக்க நீதியரசர் ஆவார்.*

*ஆகவே, இந்த நிலைமையில் உடனே தலையிட்டு, மற்ற நீதிபதிகளுக்கும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின (S.C., S.T.,) இதர பிற்படுத்தப்பட்ட மகளிர், மைனாரிட்டிகளின் பிரதிநிதித்துவம் தந்து 10, 12 நாள்களுக்கும் இந்த நான்கு பேர்களாக மட்டும் பங்கேற்பார்கள் என்ற நிலையில்லாமல், பலரையும் இணைத்து பல்வேறுபட்ட சமூகத்தவர் குறிப்பாக “அனைவருக்கும் அனைத்தும்“ என்ற நிலைதான் ‘சமூகநீதி’ என்பதற்கொப்ப, மேலும் ஒவ்வொரு நாளும் சுழற்சி (ROTATION) முறையிலோ அல்லது அவரது மேலான சிந்தனைக்கு ஏற்ப மாறுதலை உடனடியாகச் செய்ய வேண்டுகிறோம். சமூகநீதி என்பது அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள உரிமை என்பதாலும் வேண்டுகோளாகவும் வைக்கின்றோம்!*

*மக்கள் தொகையில் வெறும் 3 சதவிகிதத்தவரில் இரண்டு நீதிபதிகள் அதிலும் ஒருவர் பிரச்சினைக்குரியவராகவே மக்கள் மன்றத்தில் உணரப்படுபவர் ஆவார். Diversity is the Necessity என்பதைப் பல முறை நீதிபதிகள் நியமன கொலிஜியத்தின் பரிந்துரைகளில் வெளிப்படையாக கூறியுள்ளது உச்சநீதிமன்றம்.*

*பல ஆண்டுகள் பதவியில் இருக்கப் போகும் கீழமை நீதிமன்ற நீதிபதிகள் தேர்வில் போதிய அளவு (Adequate representation) தத்துவத்தை செயல்படுத்த, இந்த 4 உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் மாற்றப்பட்டு, மற்ற சமூக நீதிபதிகள் நியமனம் மூலம், உயர்நீதி மன்றத்தின் நீதி பரிபாலனத்தின்மீது நம்பிக்கை சிதையாமல் காக்க வேண்டும் என்று, சமூகநீதிப் பணியாளர்களின் குரலாக இதனை முன் வைக்கிறோம். இது அவசரம் - அவசியம்.*

*75-ஆம் ஆண்டு குடியரசு நாள் கொண்டாட்டத்தின் போது இப்படி ஒரு சமூகநீதிக்கான சவாலும் சங்கடமும் ஏற்படுவதைத் தடுத்து உரிய சமூகநீதி கிடைக்கும் வகையில் தலைமை நீதிபதி அவர்கள் பரிகாரம் செய்ய வேண்டியது அவசரமும், அவசியமும் அல்லவா.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்தார்.*

---

### இந்த ஆண்டு ; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் -

# பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - குடியரசு நாள் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 28-**

**இந்தியத் திருநாட்டின் 75வது குடியரசுத் திருநாளையொட்டி, நேற்று முன்தினம் விடுத்த சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நோக்கைத் தழுவி, பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சக குடிமக்கள் அனைவருக்கும் குடியரசு நாள் வாழ்த்துகள்!

நமது இந்திய ஒன்றியத்தின் அடையாளமாக விளங்கும் பன்மைத்துவம், சமத்துவம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மீதான நமது உறுதிப்பாட்டினைப் புதுப்பித்துக் கொள்வோம்.

இந்த ஆண்டு; இந்தியாவின் உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கிய நோக்கைத் தழுவி, பிரிவினைக் கொள்கைகளைத் தகர்த்தெறியட்டும்!

இவ்வாறு தமது வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கரூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் ஆர்.ஜி.சரவணமூர்த்தி தலைமையில், டி.டி.கே.அருள்முருகன் வரவேற்பில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் வி.பி.ராஜன், குடந்தை ரமேஷ், செந்தாமரை கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கே.சி.பழனிசாமி, நன்னியூர் ராஜேந்திரன், என்.மணிராஜ், கரூர் முரளி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.